## சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஊட்டச் சத்து மிக்க காலை உணவு வழங்குவதற்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண். 49

நாள். 12.08.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆடி 27

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 27.07.2022.
2. சமூக நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17250/சஉதி–2/ 2022, நாள். 04.08.2022

----

ஆணை:-

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச் சத்து குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு தொடக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கு முதற்கட்டமாக அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஏனையவற்றுக்கிடையே தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப்பள்ளி (1 முதல் 5 வகுப்பு வரை) குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2022–2023 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட சமூக நல இயக்குநரின் கடிதத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட ஏதுவாக திரு.க. இளம்பகவத், இ.ஆ.ப, சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி அவர்களை முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின், திட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக நியமித்து தக்க ஆணைகள் வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

த.பி.பா.

3. சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, திரு.க. இளம்பகவத், இ.ஆ.ப, சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி அவர்களை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின், திட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்து ஆணையிடுகிறது.

4. மேலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகளை இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப.,
சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி, சென்னை.
சமூக நல இயக்குநர், சென்னை-15.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை-28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,சென்னை-34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9 தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி (சந) த்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/8/2022
பிரிவு அலுவலர்
12/8/2022

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.49, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 12-08-2022**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – திட்ட ஒருங்கிணைப்பு அலுவலரின் பணிகள் மற்றும் பொறுப்புகள்.**

=======

- முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை திறம்பட செயல்படுத்தும் வகையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.27.07.2022-ன்படி பள்ளிகள், பயனாளிகள், ஒருங்கிணைப்பு மையங்கள் மற்றும் திட்டம் செயல்படுத்தும் அமைப்புகளை துரிதமாக கண்டறிவதை உறுதி செய்தல்.
- தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மாவட்ட மற்றும் மண்டல அலுவலர்களுடன் காலை சிற்றுண்டிக்கான மூலப் பொருட்கள் கொள்முதல் தொடர்பாக விவாதித்தல் மற்றும் மூலப்பொருட்களை உரிய முறையில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கொள்முதல் செய்வதை உறுதி செய்தல்/கண்காணித்தல்.
- உள்ளூரில் கிடைக்கக்கூடிய / விளையக்கூடிய காய்கறிகள் மற்றும் சிறுதானியங்கள் கொள்முதல் செய்வதற்கான எளிய வழிமுறைகளை கண்டறிதல்.
- நகர்ப்புறங்களில் திட்டம் செயல்பட ஏதுவாக மையப்படுத்தப்பட்ட சமையல் கூடங்கள் / கிராம ஊராட்சிகளில் திட்டம் செயல்பட ஏதுவாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை கண்டறிவதற்கு சம்மந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆலோசித்தல்.
- மூலப் பொருட்களின் சுத்தத் தன்மை இயல்பான நிறம் மணம் போன்றவற்றினை உறுதி செய்வதற்கு தொடர்புடைய நபர்கள்/ அமைப்புகளுக்கு வழிகாட்டுதல்.
- பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைத்தலை உறுதி செய்தல்
- காலை சிற்றுண்டியினை தயாரிக்கப்படும் சமையல் கூடத்தில் இருந்து பள்ளிகளுக்கு வாகனங்கள் மூலம் எடுத்துச் சென்று பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் உணவு சென்றடைவதை உறுதி செய்தல்.
- பள்ளிக் கல்வி, ஊரக உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டம் செயல்படுவதை உறுதி செய்தல்.
- திட்டம் செயல்படுத்தும் அமைப்புகள் / துறைகள் மற்றும் அலுவலர்களுடன் அவ்வப்போது ஒருங்கிணைந்த கூட்டங்கள் நடத்தி திட்டம் சிறப்பாக செயல்பட உதவுதல்.

- இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கள அலுவலர்களின் செயல்திறன்களை கண்காணித்தல்.
- திட்டத்தில் ஈடுபடும் பணியாளர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் திட்டம் பற்றிய புரிதலை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான வழிகாட்டுதல்கள்/ அறிக்கைகள் போன்றவற்றினை அனைத்து செயல்பாட்டு அலுவலர்களுடன் கலந்து தயாரித்தல்.
- திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டினை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களோடு இணைந்து கண்காணித்தல்
- திட்டச் செயல்பாடுகளை இணைய வழியில் கண்காணித்தல்.

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்